சார்பு நீதிமன்றம், பெருந்துறை

OS No: 113/2019

2022 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. எஸ். தமிழ்செல்வி,பி.காம்., எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரஸ்வதி | ஜாதி | |
| க.பெயர் | சின்னசாமி நாடார் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| மாவட்டம் | | வயது | |

**வாசா. 1 (பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை )**

என் தந்தை பெயர் சுப்பா நாடார் ஆகும். என் அம்மா பெயர் பெரியம்மாள். என் தாத்தா பெயர் சின்னப்ப நாடார். சின்னப்ப நாடார் மனைவி பெயர் சின்னம்மாள். தாவா சொத்து சின்னப்ப நாடாரின் சொத்து அல்ல என்றால் சரிதான். என் அப்பாவிற்கு நான் மூத்த மகள் ஆவேன். எனக்கு அடுத்து என் தம்பி பிரதிவாதி ஆவார். 3 வதாக பிறந்த உத்தமி என்ற தங்கை இறந்து விட்டார். எனக்கு முன்பாக இரண்டு பெண் குழந்தை பிறந்தவுடன் இறந்து விட்டது. எனக்கு குப்பாயி என்ற பெயரும் உண்டு. எனக்கு திருமணம் ஆகி நாற்பத்தி மூன்று வருடங்கள் ஆகிறது. எனக்கு திருமணம் ஆகி பதினைந்து வருடம் கழித்து என் தம்பி பிரதிவாதிக்கு திருமணம் ஆனது. என்னை திருச்சி மாவட்டம், மேட்டுப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்தனர். என் கணவர் இறந்து பதினைந்து வருடங்கள் ஆகிறது. என் தம்பி திருமணத்தின் போது சுப்பா நாடார் இறந்து விட்டார் என்றால் சரிதான். சுப்பா நாடார் திருச்சி மேட்டுப் பட்டியில் இறந்தார். சுப்பா நாடார் உடல்நிலை சரியில்லாமல் வயதான பின்னர் இறந்தார். நான் தற்போது தட்டாங்காட்டு புதுரில் வசித்து வருகிறேன். தாவா சொத்திற்கு அருகில் இருக்கிறேன். நான் பஞ்சாயத்து போடப்படும் ரோடு வேலைக்கு செல்கிறேன். எனக்கு வேறு வருமானம் இல்லை. திருச்சியில் கணவரின் சொத்துக்களை விற்று விட்டு வந்து தான் இங்கு வீடு

கட்டினோம். அவ்வாறு திருச்சியில் கணவரின் சொத்துக்களை விற்று விட்டு வீடு கட்டியதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு விற்ற சொத்துக்களின் கிரய பத்திரத்தின் நகலை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் தற்போது குடியிருக்கும் வீடு பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் தந்தை செய்த உதவியால் இடம் வாங்கப்பட்டு, பின்னர் வீடு கட்டப்பட்டது என்றால் சாட்சி முதலில் ஆமாம் என்றும், பின்னர் என் மகன் மற்றும் கணவர் சம்பாதித்த சொத்து ஆகும் என்று சொல்கிறார். எனக்கு ஒரு மகன் மனோகர் மற்றும் ஒரு மகள் சசிகலா ஆகும். என் மகனுக்கு தற்போது நாற்பது வயதாகிறது. மகளுக்கு நாற்பத்து இரண்டு வயதாகிறது. என் கணவர் உயிருடன் இருக்கும்போதே என் பிள்ளைகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. என் மகன் டிப்ளமோ படித்துள்ளார். என் மகன் இருபது வயதில் படிப்பை முடித்துவிட்டு, நான்கு , ஐந்து வருடங்கள் கழித்து தான் வேலைக்கு சென்றார். என் மகளுக்கு திருமணம் ஆகி இருபத்து நான்கு வருடமாகிறது. என் மகள் வேலைக்கு எங்கும் செல்லவில்லை, படிப்பை முடித்தவுடன் திருமணம் செய்து வைத்து விட்டேன். எனக்கு எழுத படிக்கத் தெரியாது. நான் கையெழுத்து மட்டும் போடுவேன். எழுத படிக்கத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 1 அடமான பத்திரத்தை நான்தான் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நகல் எடுத்தேன். என் மகனிடம் கொடுத்து வாசாஆ 1 அடமான பத்திரத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து விவரங்கள் தெரிந்து கொண்டேன். வாசாஆ 1 பத்திரத்தை நகல் எடுத்து பார்த்த பின்னர் தான் அடமானம் வைத்த விவரம் தெரியுமா என்றால் சரியல்ல. என் அப்பா அடமானம் வைக்கும்போதே தெரியும். நானும் என் அப்பாவும் அக்கடனை செலுத்தி விட்டோம். என் திருமணம் முடிந்த பின்னர் இரண்டு மூன்று வருடங்களில் அடமான கடனை செலுத்தி விட்டோம். தாவா சொத்துக்களை என் சித்தப்பா சேமலை நாடாரிடம் அடமானம் வைத்தோம். சேமலை நாடார் இறந்து ஆறு, ஏழு வருடங்கள் ஆகிறது. அடமான கடனை செலுத்திய பின் அடமான பத்திரத்தை ரத்து செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இத்தனை வருடங்களாக தம்பியை கூப்பிட்டும், அவரும் வரவில்லை, எனவே நாங்கள் விட்டு விட்டோம்.

எனது திருமணத்தின்போது என் தம்பியான பிரதிவாதிக்கு பத்து வயதைவிட குறைவாகதான் இருக்கும். பத்து வயதுள்ள என் தம்பிக்கு அப்போது விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல, கொஞ்சம் கொஞ்சமாக தெரியும். திருமணத்திற்கு பின் அடமான கடனை செலுத்தியுள்ள நிலையில் என் அப்பாவே ரத்து பத்திரத்தை எழுதியிருக்கலாம் என்றாலும், என் தம்பி எழுத வேண்டிய அவசியமே இல்லை என்றாலும் சரியல்ல. என் சித்தப்பா வேண்டாம் என்று சொல்லிவிட்டார், என் அப்பாவும் விட்டு விட்டார். நானும் என் அப்பாவும் அடமான கடனை செலுத்தியதற்கு எந்த ஒரு எழுத்துப் பூர்வமான ஆவணமும் இல்லை என்றால் என்னிடம் இல்லை. என் சித்தப்பா வேண்டாம் என்று சொல்லி விட்டார். பிரதிவாதி தான் அடமான கடனை திரும்ப செலுத்தினார் என்றால் கிடையாது, நான் தான் செலுத்தினேன். நானும் என் அப்பாவும் அடமான கடனை செலுத்தவில்லை என்றாலும், அதனால் தான் எந்த தேதியில் , எந்த வருடத்தில், யார் முன்னிலையில் அடமான கடனை செலுத்தியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

uploaded by

ss